**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் : 07/மா/2022
நாள்: 27 .04.2022

திரு. K. செல்வராஜ்,
கோயம்புத்தூர். – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
கிழக்கு மண்டலம் ,
கோயம்புத்தூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர், வரதராஜபுரம்மேடு, N.G.R.நகர், குமரன்ரோடு, கதவு எண்.58–ல் வசிக்கும் திரு. K.செல்வராஜ் என்பவரின் 01.01.2022 நாளிட்ட மனு 19.01.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 07/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர், வரதராஜபுரம்மேடு, N.G.R.நகர், குமரன்ரோடு, கதவு எண்.58–ல் வசிக்கும் திரு. K. செல்வராஜ் என்பவர் தனது 01.01.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில், கீழ்க்காணும் கோரிக்கையை சமர்ப்பித்துள்ளார்:

> "2018, 2019 ஆகிய வருடங்களில் மாதத்துக்கு 2 முறை தான் குடிநீர் வரும். 2020 மே மாதத்தில் இருந்து 3 முறையும் 2021 ஆகஸ்டு மாதத்தில் இருந்து 3 முறை மற்றும் 4 முறை குடிநீர் வருகின்றது. 7 x 24 என்று குடிநீர் வருவது இல்லை. இது கோவை மாநகராட்சியின் விளம்பரம், 5வருட காலமாக கூறி வருகிறார்கள். கோவை மாநகராட்சியில் 50 சதவீதம் குடிநீர் மீட்டர் உள்ளது. மீதி 50 சதவீதம் குடிநீர் மீட்டர் இல்லை. இங்கு குறை தீர்க்கும் சேவை மையம் இல்லை என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையர், கிழக்கு மண்டலம் அவர்களின் அறிக்கை இம்முறைமன்ற நடுவ 01.02.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

கோவை மாநகராட்சி உதவி ஆணையர், கிழக்கு மண்டலம் தனது 15.03.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரத்தினை தெரிவித்துள்ளார்:

" சொத்து வரி விதிப்பு எண்.6224414 மனுதாரர் திரு. K. செல்வராஜ் பெயரில் உள்ளது. குடிநீர் இணைப்பு எண். 6221810 பெயர் மாற்றம் செய்வதற்கு நாளது தேதி வரை உரிய விண்ணப்பம் மாநகராட்சியில் பெறப்படவில்லை.

மாநகராட்சி நீர்மானி கணக்கீட்டாளர் 03.11.2018 தேதிய கணக்கீட்டின்போது கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருவது அறிந்து பதிவேட்டில் பதிந்து மாநகராட்சி குடிநீர் துணைவிதிகள் பக்கம் எண்.5/2013–ன்படி Building Construction, Non Domestic என குடிநீர் வரியில் திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரருக்கு பலமுறை மாநகராட்சி மூலம் கடிதம் வழங்கியபின் கூடுதல் கட்டிடத்திற்கு 2021–22ல் சொத்து வரி திருத்தம் செய்து மாநகராட்சியில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த ரூ.422/– அரையாண்டு வரி தற்போது கூடுதல் கட்டிடத்திற்கு வரிவிதிப்பு செய்தபின் ரூ.1,019/– என உயர்த்தப்பட்டுள்ளது. அதனை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

மாநகராட்சி குடிநீர் துணைவிதிகள் 2013ன் பக்கம் 5 வரிசை எண். 4(உ) ன்படி உரிய விண்ணப்பம் மாநகராட்சிக்கு வழங்கினால் உரிய ஆணை பெற வழிவகை உள்ளது என 30.12.2021 அன்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் ந.க. எண்.7244/2017/எம்டி1 நாள்.12.09.2017–ல் ஆணையாளர் அவர்களின் குறிப்பு உத்தரவின்படி கூடுதல் வைப்புத்தொகை 2013 ஆம் வருடத்தில் இருந்து நிலுவையில் உள்ளதால், அதனையும் உடனடியாக செலுத்த மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது " என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரையும் இம்முறைமன்ற நடுவத்தின் 11.04.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 19.04.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4) மனுதாரர் 19.042022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. தனது 16.04.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் கீழ்க்கண்ட தகவலை முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்:

" நான் கூலி வேலை செய்து வருகிறேன். 2 வருடகாலமாக கூலி வேலை இல்லாமல் மிகவும் துன்பப்படுகிறேன். ஒரு வேளை உணவுக்கு மிகவும் கஷ்டப்படுகிறேன். தற்போது உடல் நலம் சரியில்லை. தற்சமயம் மனநலம் பாதிக்கப்பட்டு கோவை மருவத்துமனையில் வைத்தியம் பார்த்து வருகிறேன். எனக்கு பண கஷ்டம், யாரும் பணம் தர முன்வருவது இல்லை. எனக்கு கடன் தர மறுக்கிறார்கள். பணம் இல்லாத காரணத்தாலும் உடல் நலம் சரியில்லாத காரணத்தாலும் 19.04.2022 அன்று 1.00 மணிக்கு கலந்து கொள்ள முடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என கூறியுள்ளார்.

மேலும் 16.04.2022 தேதியிட்டு மற்றுமொரு கடிதமும் சமர்ப்பித்துள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) குடிநீர் கட்டணம் 50 சதம் குறைக்க வேண்டும்.

(ii) உயர்த்தப்பட்ட வீட்டு வரியுடன், அபராத (வட்டி) வரியை ரத்து செய்து தர வேண்டும்.

(iii) உயர்த்தப்பட்ட டெபாசிட் கட்டணத்தை ரத்து செய்து உத்தரவு தர வேண்டும் என்றும் மேலும் கோவை மாநகராட்சியில் மாதத்துக்கு இரண்டு நாட்களுக்குதான் தண்ணீர் வருகிறது. (4 மணி நேரம்). 24 x 7 என்று தினம், தினம் குடிநீர் வருகிறது என்று போலி விளம்பரம் செய்து வருகிறது கோவை மாநகராட்சி. 62வது வார்டு (புதிய வார்டு 59) இங்கு குடிநீர் சேமிக்க தண்ணீர் தொட்டி கிடையாது. நகராட்சியில் இருந்தபோது குழாய் பதித்தது. கோவை மாநகராட்சி இதுவரை புதியதாக குழாய் பதிக்கவில்லை. சுமார் 1 இலட்சம் வீடுகள் உதயமாகிறது. இதற்கும் குடிநீர் தட்டுப்பாட்டால் நிலத்தடி நீர் கலப்படம் செய்து தரமற்ற தண்ணீர் வருகிறது. இதனால், உடல் நலம் பாதிக்கப்பட்டு வருகிறது. இங்கு குடிநீர் குடிக்க பயன்படுத்தப்படுவது இல்லை, கோவை மாநகராட்சியில் மினரல் வாட்டர்தான் குடித்து வருகிறார்கள். மினரல் வாட்டர் சப்ளை செய்யும் நிறுவனங்கள் சுமார் 10,000 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. தினமலர், தினத்தந்தி, தினகரன் போன்ற தினசரி நாளிதழ்களில் விசாரிக்கவும் 24 x 7 தண்ணீர் வருவது கோவை மாநகராட்சி போலி விளம்பரம் என தெரிய வரும்.

உயர்த்தப்பட்ட வீட்டு வரியுடன் அபராத வட்டி வரி என்று கட்டிடம் சாரம் வரை அபராத வட்டி கட்ட வேண்டும் என கோவை மாநகராட்சி கூறி வருகிறது. கோவை மாநகராட்சி அதிகாரிகள் நீதிபதியாக மாறிவருகிறார்கள். எவ்வித அடிப்படை காரணம் இல்லாமல் அபராத (வட்டி) என்று வரி விதித்து வருகிறது.

கோவை மாநகராட்சியில் 30 வருடத்துக்கு முன் குடிநீர் இணைக்கப்பட்டது. அனைவருக்கும் குடிநீர் டெபாசிட் உயர்த்தாமல் எனக்கு மட்டும் உயர்த்தப்பட்டுள்ளது.

கட்டணம் செலுத்திய விவரம்.

1. A/c No. 1019 உரிமை கட்டணம் ரூ. 4900.00
2. A/c No.1043 சேவைக்கட்டணம் ரூ.
3. A/c No.4050 தொழிலாளர் நல நிதி கட்டணம் ரூ.6050.00

ஆக மொத்தம் ரூ.10950.00 கட்டியுள்ளேன்.
வீட்டு வரி விதிப்பு எண். 6230080

இதற்கு எல்லாம் காரணம் கோவை மாநகராட்சியில் புரோக்கர் நடமாட்டம் அதிகமாகியுள்ளது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் ஆள் சேர்க்காமல் தங்களுக்கு வேண்டியவர்கள், பணம் கொடுத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படுகிறது. மேற்படி பணத்தை மீட்க எங்களை போன்றவர்களை மேலேயுள்ளது போல மாநகராட்சிக்கு பணம் கட்ட நிர்ப்பந்தம் செய்கிறார்கள். கோவை மாநகராட்சியில் புரோக்கர்களுக்கு பணம் கொடுத்தால் வரி குறைப்பதும், வீட்டு வரி புக் நேரிடையாக புரோக்கரே வீட்டு உரிமையாளரிடம் தந்து கமிசன் பெற்று கொள்கின்றனர். இதை சரிசெய்ய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் கிளை அமைத்தால்,

புகார் தெரிவிக்க எங்களுக்கு உதவியாக இருக்கும். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் தரும் தீர்ப்புக்கு நான் கட்டுப்பட்டுஉள்ளவனாக இருப்பேன். மேலே சொன்னது எல்லாம் உண்மை, உண்மைக்கு புறம்பாக எதுவும் கூறவில்லை என்பதை தாழ்ந்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 19.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் குடிநீர் பிரிவின் உதவிப்பொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மனுதாரர் தனது முதல் மாடி வீட்டை இரண்டாவது மாடியாக கட்டும்போது அவர் வசிக்கும் வீட்டிற்கான குடிநீர் வரியானது Domestic–லிருந்து Non Domestic ஆக திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது. வீடு கட்டி முடிக்கப்பட்டவுடன் சொத்து வரி விதிக்கப்பட்டு மனுதாரர் விண்ணப்பம் அளிக்கும்பட்சத்தில் குடிநீர் வரியானது Non Domestic லிருந்து, Domestic ஆக திருத்தம் செய்யப்படும். ஆனால், மனுதாரர் இதுவரை விண்ணப்பம் ஏதும் அளிக்கவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சொத்து வரியைப் பொறுத்தவரை, சொத்து வரி திருத்தத்தின்படி மனுதாரரின் வீட்டிற்கு சொத்து வரி உயர்த்தப்பட்டது என்றும், மேலும் மனுதாரர் செலுத்த வேண்டி கூடுதல் வைப்புத்தொகை 2013ல் மன்றத்தால் இயற்றப்பட்ட துணைவிதிகளின்படியே அவர் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத்தொகையை செலுத்த மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று தற்போது நிலவி வரும் கோடைகாலத்தை முன்னிட்டு கோவை மாநகராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது என்றும் இருப்பினும், மனுதாரர் வசிக்கும் பகுதிக்கு குடிநீர் வசதி முடிந்த வரை மாநகராட்சியால் செய்து தரப்படுகின்றன என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்போது குடிநீர் வரி நீர்மானி கணக்கீட்டின்படி அளவிடப்படுகிறது. 35 எண்ணிக்கை நீர்மானி கணக்கீட்டாளர்கள் இப்பணிக்காக பயன்படுத்தப்படுகிறார்கள். சுமார் 80 முதல் 100 நீர்மானிகள் கணக்கீடு ஒரு நாளுக்கு ஒருவர் அளவிடுகிறார். அதன் மூலம் 3500 எண்ணிக்கை நீர்மானிகள் கணக்கீடு ஒருநாளைக்கு எடுக்கப்படுகிறது. இரண்டுமாத கால இடைவெளியில் ஒவ்வொரு குடியிருப்புகளில் உள்ள நீர்மானிகளும் கணக்கீட்டிற்கு உட்படுத்தப்படுகிறது.

<u>நடைமுறை:</u> திருவாளர்கள் சூயஸ் நிறுவனத்திடம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(அ) கணக்கீட்டாளர் தமக்கு அன்றைய தேதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகளுக்குச் சென்று நீர்மானியின் புகைப்படம் எடுத்து அவரது செயலியில் பதிவேற்றம் செய்வார்.

(ஆ) பதிவேற்றம் செய்யப்பட்ட நீர்மானியின் புகைப்படத்தை ஆய்வு செய்து பதிவாகியுள்ள எண்ணையும், ஏற்கனவே உள்ள பழைய எண்ணையும் கணக்கீடு செய்து குடிநீர் அளவு (உபயோகித்தது) மதிப்பிடப்படும்.

(இ) பின் மதிப்பீட்டை உடனடியாக உறுதி செய்து குடியிருப்பவர்கள் கைபேசிக்கு உடனடியாக வரி செலுத்த அறிவுறுத்தி குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது. இரண்டு முதல் மூன்று தினங்களுக்குள் தகவல் குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே மனுதாரின் குடியிருப்பிலும் நீர்மானி கணக்கீடு எடுக்கப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் 15.03.2022 நாளிட்ட கடிதத்தினையே மேல் வாக்குமூலமாகவும் பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, எழுத்துப்பூர்வ வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் பிரிவு உதவிப்பொறியாளர் வாக்குமூலம், மற்றும் கோவை மாநகராட்சி உதவி ஆணையர், கிழக்கு மண்டலம் அவர்களின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

- மனுதாரர் திரு கே.செல்வராஜ் குடிநீர் கட்டணத்தை குறைத்து உத்தரவு வழங்குமாறும் மேலும் குடிநீர் தினசரி வருவதில்லை எனவும் புகார் தெரிவித்துள்ளார்.
- மனுதாரர் தனது முதல் மாடி வீட்டை இரண்டாவது மாடியாக கட்டும்போது அவர் வசிக்கும் வீட்டிற்கான குடிநீர் வரியானது Domestic–லிருந்து Non Domestic–ஆக திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது. வீடு கட்டி முடிக்கப்பட்டவுடன் சொத்து வரி விதிக்கப்பட்டு மனுதாரர் விண்ணப்பம் அளிக்கும்பட்சத்தில் குடிநீர் வரியானது Non Domestic–லிருந்து Domestic–ஆக திருத்தம் செய்யப்படும். ஆனால் மனுதாரர் இதுவரை விண்ணப்பம் ஏதும் அளிக்கவில்லை என விசாரணையில் தெரியவருகிறது.
- சொத்துவரியைப் பொறுத்தவரை, சொத்துவரி திருத்தத்தின்படி மனுதாரரின் வீட்டிற்கு சொத்து வரி உயர்த்தப்பட்டது என்றும், மேலும் மனுதாரர் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத்தொகை 2013ல் மன்றத்தால் இயற்றப்பட்ட துணைவிதிகளின்படியே அவர் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத்தொகையை செலுத்த மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.
- கோடைக் காலத்தை முன்னிட்டு கோவை மாநகராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது இருப்பினும், மனுதாரர் வசிக்கும் பகுதிக்கு குடிநீர் வசதி முடிந்தவரை மாநகராட்சியால் செய்து தரப்படுகின்றன எனவும் அறியமுடிகிறது.
- கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்போது குடிநீர் வரி நீர்மானி கணக்கீட்டின்படி அளவிடப்படுகிறது. 35 எண்ணிக்கை நீர்மானி கணக்கீட்டாளர்கள் இப்பணிக்காக பயன்படுத்தப்படுகிறார்கள். சுமார் 80 முதல் 100 நீர்மானிகளின் கணக்கீடு ஒரு நாளுக்கு ஒருவர் அளவிடுகிறார். அதன் மூலம் 3500 எண்ணிக்கை நீர்மானிகளின் கணக்கீடு ஒருநாளைக்கு எடுக்கப்படுகிறது. இரண்டு மாத கால இடைவெளியில் ஒவ்வொரு குடியிருப்புகளில் உள்ள நீர்மானிகளும் கணக்கீட்டிற்கு உட்படுத்தப்படுகிறது என்றும் அறியமுடிகிறது.

பொது நல நோக்கில் மனுதாரர் மனு அளித்து, அதை இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொள்ளும்போது, விசாரணைக்கு அழைத்தால் இனிவரும் காலங்களில் தவறாமல் ஆஜராக மனுதாருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துக்கிறது. மேலும் மனுதாரர் குறிப்பிடும் குற்றச்சாட்டுக்களுக்கு எந்தவித ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை என்பதால் இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை ஏற்க இயலாது. இருப்பினும் மனுதாரர் வசிக்கும்

பகுதிக்கு குடிநீர் முறையாக வழங்கிட உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும், மனுதாரர் விண்ணப்பம் அளிக்கும்பட்சத்தில் குடிநீர் வரியை Non-domesticலிருந்து domestic–ஆக காலதாமதமின்றி திருத்தம் செய்திடவும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

மேலும் தற்போது கோடைகாலமென்பதால் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் தங்குதடையின்றி குடிநீர் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களுக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. K. செல்வராஜ்,
எண்.58, குமரன் ரோடு,
N.G.R. நகர், வரதராஜபுரம் மேடு,
கோயம்புத்தூர் – 641 015.

2) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
கோயமபுத்தூர்.

3) உதவி ஆணையாளர்,
கிழக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
கோயமபுத்தூர் – 641 005.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.